இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 11-09-2024

# சதிகாரர்கள் பெருகிவிட்டார்கள்!

'கேள்விக்குறியாகிவிட்டது தமிழக சட்டம் - ஒழுங்கு நிலவரம்' என்று தலைப்புச் செய்தி வெளியிட்டு இருக்கிறது 'தினமலர்' நாளேடு! சட்டம் - ஒழுங்கு கேள்விக்குறியாகவில்லை. **'சட்டம் - ஒழுங்கு கெட வில்லையே? எப்படிக் கெடுக்கலாம்?'** என்று சதி செய்வோர் பெருகிவிட டார்கள்!

**'தினமலர்' தலைப்புச் செய்தியைப் போட்டதும், 'தூத்துக்குடி 13 கொலை' பழனிசாமி அறிக்கை விடுகிறார். இன்னும் சில நாட்களில் கிண்டிக்காரர் டுவிட் போடுவார். இவை எல்லாம் சதிச்செயலின் 'சைக்ளிங்' ஆகும். இதனை தமிழ்நாடு அறியாமல் இல்லை. புரியாமல் இல்லை.**

தமிழ்நாட்டில் ஒரே நாளில் வெவ்வேறு ஊர்களில் நடைபெற்ற குற்றச் சம்பவங்களைத் தொகுத்து மொத்தமாக 6 பேர் படுகொலை செய்யப்பட்டதைப் போல தலைப்புச் செய்தி போடுகிறது 'தினமலர்'. அதற்குக் கீழே, 'கேள்விக்குறியாகிறது தமிழக சட்டம் - ஒழுங்கு நிலவரம்' என்று தலைப்பும் போடுகிறது.

சில ஆண்டுகளுக்கு முன்னால், ஒரு நாளிதழின் உரிமையாளரும் ஆசிரியருமான ஒருவரைப் பற்றி அடையாறு காவல்நிலையத்தில் அதே நிறுவனத்தில் பணியாற்றிய பெண் நிருபர், பாலியல் புகார் அளித்தார். அந்தப் புகாரின் அடிப்படையில் விசாரணைக்கு அதிகாலையில் தலையை மறைத்துக் கொண்டு ஒருவர் வந்து ஆஜர் ஆனார். அதை வைத்து, **'தமிழ்நாட்டில் பாலியல் வன்கொடுமைகள் அதிகமாகி விட்டது'** என்று தலைப்புச் செய்தி போட முடியுமா?... முடியுமா?

6 பேர் படுகொலை என்பது தனித்தனி சம்பவங்கள். இதனை விளக்கி தமிழ்நாடு காவல் துறை விரிவான விளக்கத்தைச் சொல்லி இருக்கிறது. **"அனைத்து சம்பவங்களும் சொத்து தகராறு, உறவினர்களுக்கு இடையே முன் விரோதம், திடீர் ஆவேசம் போன்றவற்றால் நடைபெற்றுள்ளன. சாதி, மத மோதல் காரணமாகவோ, கலவரத்தை ஏற்படுத்தும் அல்லது பொதுச் சொத்துக்கு சேதம் விளைவிக்கும் வகையிலோ நடைபெற்றவை அல்ல"** என்று விளக்கம் அளித்துள்ளது காவல் துறை. இச்சம்பவங்கள் நடைபெற்ற அன்றைய தினமே அனைத்து சம்பவங்களிலும் தொடர்புடைய குற்றம் சாட்டப்படுவோர் கைது செய்யப்பட்டு விட்டார்கள். நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டு விட்டார்கள்.

**"வீண் விளம்பரத்துக்காகவும், பதற்றத்தை ஏற்படுத்தும் வகையிலும் மிகைப்படுத்தி உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிடுவது உகந்ததல்ல"** என்றும் காவல் துறை அறிவுறுத்தி உள்ளது. தனிப்பட்ட குற்றங்களுக்கும் சட்டம் ஒழுங்குக்கும் வித்தியாசம் தெரியாமல், அல்லது தெரிந்தே செய்தி வெளியிடும் அளவுக்கு தமிழ்நாட்டில் பத்திரிக்கா தர்மம் தான் கேள்விக்குறியாகி உள்ளது.

இதைப் பார்த்ததும், 'கிடைச்சது ஒரு மேட்டர்' என்று விழுந்து புரளத் தொடங்கிவிட்டார் 'தூத்துக்குடி 13 கொலை' பழனிசாமி. அமைதியாக ஊர்வலம் போனவர்களை சுடச் சொல்லி விட்டு, டி.வி.யில் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தவர்தான் இந்த பழனிசாமி.

தூத்துக்குடி சம்பவம் பற்றி அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நீதிபதி அருணா ஜெகதீசன் அவர்கள் தலைமையில் விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டது. பழனிசாமிக்குத் தெரிந்தேதான் அந்தக் கொலைகள் அரங்கேற்றப்பட்டதாக அந்த ஆணையமே சொல்லி இருக்கிறது. அறிக்கையின் 2 ஆவது பாகம் - 219 ஆவது பக்கத்தில் இடம் பெற்றுள்ள 252 ஆவது கருத்து இது:

**".....have been updating the Chief Minister Tr. Edapadi K. Palanisamy with minute to minute development which took place in Thoothukudi and as such to say that the then Chief Minister come to know of the shooting only through the media would be incorrect or inaccurate - the Commission would opine"** என்று சொல்லி இருக்கிறது அந்த அறிக்கை.

**"தூத்துக்குடி துப்பாக்கிச்சூடு சம்பவம் பற்றி அப்போதைய முதல் அமைச்சர் எடப்பாடி பழனிசாமி, 'அந்தச் சம்பவத்தை மற்றவர்களைப் போல ஊடகங்களில் வந்த செய்தி மூலம் அறிந்து கொண்டேன்' என்று பத்திரிக்கையாளர்களுக்கு பேட்டி அளித்தார்.**

**ஆனால் இந்த ஆணையத்திடம் மிக வலுவாக இருக்கும் ஆதாரம் என்னவென்றால், சாட்சியாக விசாரிக்கப்பட்ட அப்போதைய தலைமைச் செயலாளர் கிரிஜா வைத்தியநாதன், அப்போதைய டி.ஜி.பி. ராஜேந்திரன், அப்போதைய உளவுத்துறை ஐ.ஜி. சத்தியமூர்த்தி ஆகியோர் தூத்துக்குடியில் நடக்கும் சம்பவங்களையும், அங்குள்ள நிலவரங்களையும் நிமிடத்துக்கு நிமிடம் எடப்பாடி பழனிசாமியிடம் தெரிவித்து வந்ததாகக் கூறினார்கள்.**

**எனவே, ஊடகங்கள் மூலமாகத் தான் அந்தச் சம்பவம் பற்றி தெரிந்து கொண்டதாக எடப்பாடி பழனிசாமி கூறியது தவறான கருத்து என்பது இந்த ஆணையத்தின் கருத்தாகும்"** என்று ஆணையத்தின் அறிக்கை சொல்கிறது.

இந்த ரத்தக்கறைச் சட்டையை 'கொடநாட்டில்' மறைத்துவிட்டுத் தான் இப்போது 'சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது' என்று சதிச் செயல்களில் இறங்கி இருக்கிறார்.

**அமெரிக்காவில் இருந்து முதலீடுகள் குவிவதும், பல்லாயிரக்கணக்கான அமெரிக்க வாழ் தமிழர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு விண்ணதிர வரவேற்பு வாழ்த்து தெரிவித்ததும் இவர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. 'காந்தாரியைப்' போல அடிவயிற்றில் அடித்துக் கொள்கிறார்கள்.**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் 9.9.2024 அன்று அமெரிக்க நாட்டின் சிகாகோவில், ராக்வெல் ஆட்டோமேஷன் நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே 666 கோடி ரூபாய் முதலீட்டில் காஞ்சிபுரத்தில் மின்னணு உற்பத்தி நிறுவன விரிவாக்கத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி. அருண் ராய், தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே.விஷ்ணு, ராக்வெல் ஆட்டோமேஷன் நிறுவனத்தின் தலைவர் மற்றும் முதன்மை செயல் அலுவலர் பிளேக் மோரெட், முதுநிலை துணைத் தலைவர் ராபர்ட் பட்டர்மோர், துணைத் தலைவர் எட்வர்ட் மோர்லான்டு, இயக்குநர் முத்துகுமரன் பிச்சை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## ரூ.1000 உரிமைத் தொகை ஓட்டுக்காக அல்ல!

# பெண்களின் முன்னேற்றத்துக்கு வழங்கும் தாய் வீட்டுச் சீதனம்!

### திருவண்ணாமலையில் அமைச்சர் எ.வ.வேலு பேச்சு!

திருவண்ணாமலை, செப். 11 -

தாய்மார்களுக்கு ரூ.1000 உரிமைத்தொகை வழங்குவது ஓட்டுக்காக அல்ல. பெண்களின் முன்னேற்றத்துக்கு திராவிட இயக்கம் வழங்கிய தாய் வீட்டு சீதனம் என்று திருவண்ணாமலையில் நடந்த விழாவில் அமைச்சர் எ.வ.வேலு பேசினார்.



திருவண்ணாமலை கலெக்டர் அலுவலகத்தில் உள்ள கூட்ட அரங்கத்தில் மகளிர் குழுக்களுக்கு கடனுதவி வழங்கும் விழா நேற்று முன்தினம் நடந்தது. கலெக்டர் பாஸ்கர பாண்டியன் தலைமை தாங்கினார். துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி, எம்.எல்.ஏ.க்கள் மு.பெ. கிரி, பெ.சு.தி.சரவணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மகளிர் குழுக்களுக்கு ரூ.136.48 கோடி மதிப்பிலான கடனுதவிகளை வழங்கி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு பேசியதாவது: -

பெரியார், அண்ணா, கலைஞர் ஆகியோர் பெண்கள் முன்னேற வேண்டும் என அயராது உழைத்தனர். பெண்கள் படிக்க வேண்டும் என விரும்பினர். அவர்களது வழியில் திராவிட மாடல் ஆட்சியை நடத்தும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பெண்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் திட்டங்களை நிறைவேற்றி வருகிறார். மகளிர் குழுக்கள் செயல்பாடுகளில் தமிழ்நாடுதான் இந்தியாவிலேயே சிறப்பாக உள்ளது.

ஆண்டுக்கு ஒருமுறை பொங்கல் பண்டிகையின்போது, தாய்வீட்டில் இருந்து வரும் ஒரு சேலையும், பத்து ரூபாயும்தான் சீதனம் என்ற நிலையை மாற்றி, தாய் வீட்டு சீதனமாக மாதந்தோறும் தாய்மார்களுக்கு ரூ.1000 உரிமைத்தொகையை வழங்கியவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். இத்திட்டம் ஓட்டுக்காக அல்ல. பெண்களின் முன்னேற்றத்துக்கு திராவிட இயக்கம் வழங்கிய தாய் வீட்டு சீதனம்.

கலைஞர் மற்றும் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழியில் பெண்கள் முன்னேற்றத்துக்காக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நடத்தும் விழா இன்று நடக்கிறது. தமிழ்நாட்டில் மகளிர் குழுக்களுக்கு அதிக கடன் வழங்கப்படும் மாவட்டங்களில் திருவண்ணா மலை முதலிடத்தில் இருக்கிறது.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு பேசினார்.

# முதல்வருக்கு அமெரிக்காவில் வரவேற்பு!

### நடிகர் விஜய் சேதுபதி மகிழ்ச்சி!

சென்னை, செப். 11 -

அமெரிக்காவில் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு கிடைத்த வரவேற்பு மகிழ்ச்சி அளிக்கிறது என்று நடிகர் விஜய் சேதுபதி கூறியுள்ளார்.

முதலீடுகளை ஈர்ப்பதற்காக அமெரிக்கா சென்றுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சிகாகோ நகரில் அமெரிக்க வாழ் தமிழர்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் பங்கேற்றார்.

பட்டு வேட்டி, பட்டுச்சட்டை அணிந்து விழாவில் பங்கேற்ற முதலமைச்சருக்கு அமெரிக்க வாழ் தமிழர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.



அங்கு பேசிய முதல்வர் அவர்கள், "தமிழர்கள் எங்கு பாதிக்கப்பட்டாலும், தாய்வீடு தமிழ்நாடு இருக்கிறது என்ற நிலையை உருவாக்கியுள்ளோம்'' என்றார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் இந்த பேச்சு அமெரிக்க வாழ் தமிழர்களிடையே பலத்த வரவேற்பை பெற்றது.

இதுதொடர்பான புகைப்படத்தை தனது டிவிட்டர் பக்கத்தில் வெளியிட்ட நடிகர் விஜய் சேதுபதி,

'அமெரிக்காவிலுள்ள தமிழர்களிடையே நமது முதல்வருக்கு கிடைத்த வரவேற்பு மகிழ்ச்சி அளிக்கிறது' என பதிவிட்டுள்ளார்.

அவர் வெளியிட்ட புகைப்படத்தில், மேடையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கையசைக்க, தமிழர்கள் ஆர்ப்பரித்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் காட்சி இடம் பெற்றுள்ளது.

## பெருங்களத்தூர் வடக்குப் பகுதிக் கூட்டம்!

தாம்பரம், செப்.11 –

தாம்பரம் மாநகரம் பெருங்களத்தூர் வடக்குப் பகுதிச் செயலாளர் டி.காமராஜ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:–

கழக தலைவர் – முதல்வர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க நாளை (12.9.2024) காலை 10 மணியளவில் மேற்கு தாம்பரம் டி.ஜி.பி. திருமண மண்டபத்தில் கொறடா பகுதிக் கழக அவைத்தலைவர் டி.ஆர்.கோபி எம்.சி. தலைமையில் ஜா.ரவிகுமார், லிங்கேஸ்வரி பாபு எம்.சி., ஆர்.செல்வகுமார், செ.சுரேஷ் எம்.சி., மு.ரவிகுமார், இரா.கந்தசாமி, எம்.கன்னியப்பன், எஸ்.சரவணன் ஆகியோர் முன்னிலையில் ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்ற வருகை தரும் கழகப் பொருளாளர், கழக மக்களைவை குழுத் தலைவர் டி.ஆர்.பாலு எம்.பி., அமைச்சர், காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.மோ.அன்பரசன், தாம்பரம் மாநகரக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. சிறப்புரையாற்ற உள்ளார்கள்.

எனவே, இக்கூட்டத்தில் மேயர், மாவட்ட, மாநகர, பகுதி, வட்ட நிர்வாகிகள், பிரதிநிதிகள், இருபால் உள்ளாட்சி பிரதிநிதிகள், பாக நிலை முகவர்கள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி மற்றும் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், சிறப்பு அழைப்பாளர்கள் என அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.





விழுப்புரத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி 'சமூக நீதிக் காவலர் – கலைஞர்' நூற்றாண்டு விழாக் குழு சார்பில் மாபெரும் கருத்தரங்கம் நடைபெற்றது. இக்கருத்தரங்க தொடக்க நிகழ்ச்சியாக புகைப்பட நிபுணர் கோவை சுப்பு ஏற்பாட்டில் – கலைஞர் நூற்றாண்டு புகைப்படக் கண்காட்சியை அமைச்சர் முனைவர் க.பொன்முடி திறந்து வைத்தார். இதில் பேரா. சுப.வீரபாண்டியன் உள்ளிட்ட கருத்தரங்க சொற்பொழிவாளர்கள், மாவட்டப் பொறுப்பாளர் பொன். கௌதம சிகாமணி மற்றும் கழகத்தினர் பங்கேற்றனர்.